மெதகம பிரதேச சபை - 2023

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெதகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றம் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம் பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயலாற்றல் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்கான ரூபா 815,344 நிர்மாண கடன் கொடுத்தோர் மீதி ஒன்று மீளாய்வாண்டிற்குறிய செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | முன்னைய ஆண்டுக்கான ரூபா 1,625,344 ஆன பெறவேண்டிய நிர்மாண கடன் பட்டோர் மீளாய்வாண்டின் மூலதன பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் பிரதேச சபைக்கு சொந்தமான 8 இடங்களுக்கு மின் இணைப்புகளை பெறுவதற்கு செலவிடப்பட்ட ரூபா 266,980 தொகையை ஆதனங்கள், இயந்திரங்கள் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு இருந்த ரூபா 240,390 ஆன 05 நிர்மாண வேலைகள் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களினதும் பெறுமதிகளை நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாட உபகரணங்களின் பெறுமதி ரூபா 661,875 ஆக இருந்த போதும் அது ரூபா 588,611 என ரூபா 73,264 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | விற்பனை முகவர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலை விபரங்களின் பிரகாரம் உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,000 ஆன UPS இயந்திரம் மற்றும் டிராக்டர் வண்டியின் கூரையை அமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 88,000 ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களினதும் பெறுமதிகளை நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (எ) | மயானத்தின் கராஜ் அருகில் படிகளை அமைப்பதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 22,140 ஆக இருந்த போதும் அது ரூபா 78,300 என ரூபா 56,160 கூடுதலாக காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஏ) | பிரதேச சபைக்கு கிடைத்திறந்த 02 நீர் தாங்கிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களினதும் பெறுமதிகளை நிதி கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபைக்கு சொந்தமான இருப்பில் ரூபா | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 98,218 பெறுமதியான இருப்பு நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டு இருந்தது | சீராக்குவதாக | வேண்டும் |
| (ஒ) | மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட சேதன பசளை இருப்பின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சேதனப் பசளை இருப்புக் கணக்குக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சேதன பசளை இருப்பின் பெறுமதியை உள்ளடக்குவதற்காக பதிவேடொன்று பேணப்படு வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஓ) | மீளாய்வாண்டின போது பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 6,695,727 தொகையாக இருந்த போதும் ரூபா 7,042,662 என கருதி மூலதன மானிய கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஔ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்பு பதிவேட்டின் பிரகாரம் வைப்பு மீதி ரூபா 2,109,093 ஆக இருந்த போதும் அது ரூபா 2,165,960 ஆக ரூபா 56,867 கூடுதலாக நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | உரிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (க) | சபைக்கு எதிராக தொடரப்பட்டு இருந்த 03 வழக்குகள் தொடர்பாக நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களினதும் பெறுமதிகளை நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (கா) | கல்லோய சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ள காணி மற்றும் கொங்கொல்ல<br><br>பல்நோக்கு கட்டிடம் அமைந்துள்ள | 2024 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களினதும் பெறுமதிகளை நிதி |

| | | |
|---|---|---|
| காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டில் உள்ளடக்குவதாக | கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 <u>இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி மற்றும் அட்டவணைகளில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிக்கு இடையே ரூபா 49,237,421 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் நாளதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும். |

**1.6.3 <u>கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,476,191,557 கூட்டுப்பெறுமதியான 06 சொத்து விடயங்கள் தொடர்பாக உரித்து உறுதிகள், மதிப்பீட்டாளர்கள் அறிக்கை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் மற்றும் நாளது வரையாக்கப்பட்ட வீதவரி பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது | உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் கட்டம் கட்டமாக துறைசார் மதிப்பீடு பெற்றுக்கொள்வதாகவும் ஏனைய பதிவேடுகளை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய பதிவேடுகள் அறிக்கைகளை நாளதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும். |

**1.7 <u>இணக்கமின்மைகள்</u>**

**<u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்</u>**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) இல. 104(4) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 02 வாகனங்களுக்கு 02 சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஆரம்ப புலனாய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2013 ஜூன் 28 ஆம் தேதி 1816/43 ஆம் இலக்க வர்த்தமானி | சபைக்குச் சொந்தமான 03 வாசிகசாலைகளில் 6243 வாசிப்பாளர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 624,300 ஆன நூலக வைப்பு தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் நூலக அங்கத்துவத்தை பெற்றுக்கொள்பர்களிட மிருந்து ரூபா 100ஆன நூலக வைப்பொன்று அறவிடுவதாக | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 83(1) ஆம் பிரிவு | சபையினால் 2016 முதல் 2020 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 120 கட்டிட திட்டங்களைப் பரீட்சித்து இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை | எதிர்காலத்தில் இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | விதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் பிரதேசத்தில் 690 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த போதும் வீதிகளுக்கு வெளிச்சமுட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை | இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ள பொது சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் பொதுச் சபையால் உடன்படிக்கை செய்தல் நிராகரிக்கப்பட்டதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

--------------------------

**2.1 நிதி விளைவுகள்**

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,290,535 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,588,389 ஆக இருந்தது.

**2.2 <u>வருமான நிர்வாகம்</u>**

**2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்</u>**

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,156,291 | 3,125,764 | 2,344,395 | 781,369 | 825,538 | 1,400,095 | 1,035,237 | 364,858 |
| (ii) | வாடகை | 32,032,452 | 49,474,319 | 29,171,333 | 20,302,986 | 23,900,017 | 33,162,510 | 24,373,574 | 8,788,936 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 630,160 | 369,309 | 369,309 | - | 532,320 | 216,708 | 216,708 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 19,772,740 | 18,778,537 | 12,398,531 | 6,380,006 | 17,797,300 | 9,290,194 | 6,289,744 | 3,000,450 |
| | | 54,591,643 | 71,747,929 | 44,283,568 | 27,464,361 | 43,055,175 | 44,069,507 | 31,915,263 | 12,154,244 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வீதவரியும் வரியும்** | | |
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 1,277,,903 ஆன வீத வருமானத்தில் ஆண்டின் இறுதிவரை ரூபா 520,778 தொகை அதாவது 41 சதவீதம் அறவிடப்படாதிருந்தது. | நிலுவை வருமானத்தை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 174,011 ஆன நிலுவை வீத வரி வருமானத்தில் இருந்து ரூபா 91,285 அறவிடப்பட்டு அதாவது 52 சதவீத அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரி உடையோர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் கொடுப்பனவு செய்ய வேண்டி இருந்தால் உரிய ஆதனங்களை தடை செய்வதற்கு எதிர்பார்த்து உள்ளதாக. | நிலுவை வீத வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டுக்குரிய ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 6,662,759 ஆன வாடகை வருமானம் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 22,505,022 ஆன கேள்வி ஆதன குத்தகை வருமானத்தில் இருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,322,815 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகையாளர்களால் வைப்புச் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு பிணை வைப்புகளில் இருந்து நிலுவைத் தொகையை தீர்வு செய்வதற்கும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் உள்ளதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |

**<u>வாடகை</u>**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 6,098,250 ஆன கடை அறைகளின் வருமானத்தில் ரூபா 1,300,625 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 2,120,390 ஆன ஆன நிலுவை வாடகை வருமானத்தில் இருந்து ரூபா 1,016,785 அதாவது 48 சதவீத அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கொவிட் தொற்று காரணமாக கடை உரிமையாளர்களுக்கு சலுகை வழங்குவதற்காக தீர்மானிக்கப்பட்ட நிலுவை மீதி ஒன்றாக இருந்ததுடன் ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |

**<u>அனுமதிப்பத்திர கட்டணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான வழிகாட்டல் கோவையின் 2.5.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திர கட்டணங்கள் மற்றும் வெளிக்கள பரிசோதனை கட்டணங்கள் ஆக அறவிடப்படுகின்ற தொகையை செலவு வைப்பதற்காக வேறாக கணக்கொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் 2.37 வருமான தலைப்பின் கீழ் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மற்றும் சுற்றாடல் கணிப்பீட்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெறவேண்டிய கைத்தொழில்களை இனங்காண்பதற்காக 2023 ஆம் ஆண்டில் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்த 35 கைத்தொழில்களுக்காக மீண்டும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்த கைத் தொழிலாளர்களுக்கு அது தொடர்பில் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் |

**<u>ஏனைய வருமானம்</u>**

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் வாகனங்கள் மற்றும் இயந்திர காரணங்களை வாடகைக்கு வழங்கியமைக்காக அளவிடப்பட வேண்டிய ரூபா 514,140 ஆன நிலுவை இயந்திர வாடகை வருமானம் மீளாய்ண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 104,083 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 5,761,782 ஆக இருந்தது. | நிலுவைத் தொகைகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் உள்ளுர் உணவகத்திற்காக உள்நாட்டு உணவு வகைகளை தயாரிப்பதற்கு முன் பனை ஓலையுடன் அண்மித்த நிர்மாணங்களை செய்வதற்கு 50 பெண்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக கிடைத்திருந்த ரூபா 250,000 ஆன நிதி ஏற்பாடு அச் செயற்திட்டத்தை செயற்படுத்தமை காரணமாக மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டு இருந்தது. | பிரதேச சபை கலைக்கப்பட்டதனுடன் ஒரு உறுப்பினரால் வழங்கப்பட்ட செயற்திட்ட அறிக்கையை செயற்படுத்த முடியாமல் காரணமாக பணத்தை ஊவா மாகாண திட்டமிடல் வதிணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக | நிதி ஏற்பாட்டுகளை உரிய காலப் பகுதியில் செயற்திரனாக பயன்படுத்த வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை | 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீடு கோவிட் தொற்று காரணமாக 2023 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டதாகவும் மீண்டும் மதிப்பீடு 2028 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உள்ளதாகவும் | வீதவரி மதிப்பீடு காலரீதியாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்டும் |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரிய 02 வாகனங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயலற்ற நிலையில் காணப்பட்டதுடன் அவ்வாகனங்களை திருத்துவதற்கும் அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாகனங்களின் பதிவு இலக்கம் இல்லாததால் அவற்றை கைதவிர்ப்பதற்கோ அல்லது புதுப்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் இது தொடர்பாக திணைக்களத்தின் தலைவர்களின் ஆலோசனை பெற்றுக்கொண்டு எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | உரிய காலப்பகுதியில் வாகன திருத்தங்களை மேற்கொள்வதற்கோ அல்லது கைதவிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஜனவரி 25 ஆம் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டல முகவர் நிறுவனத்தின் 08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.2.2 பந்தியின் பிரகாரம் தேசிய போட்டி கேள்வி கோரி குறைந்த கேள்வி சமர்ப்பிப்பதற்காக 21 நாட்கள் காலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டுக்காக குத்தகைக்குரிய கேள்வி சமர்ப்பிப்பதற்கு 15 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை செயல்பாடு முறைப்படுத்தப்பட வேண்டும் |

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெதகம பிரதேச சபைக்கு உரிய சிறுவர் பூங்காவிற்கான பாதுகாப்பு சங்கிலி வேலி நிர்மாணத்தின் 1.67 கன மீற்றர் நிறைவேற்றப்படாத வேலைக்காக ரூபா 46,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | குறித்த ஒப்பந்தக்கார அமைப்பிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிர்மான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 05 பதவிகளுக்குரிய 07 ஊழியர்கள் வெற்றிடங்களும் 02 பதவிகளில் 11 உத்தியோகத்தர்களுக்கு மிகை காணப்பட்டது. | இந்த வெற்றிடங் களுக்குரிய பதவியணி ஆட்சேர்ப்பிற்காக அறிக்கை சமர்ப்பித்துள்ளதுடன் மிகையை அங்கீகரிப்பதற்காக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதவியணி வெற்றிடங்களை நிரப்வுவதற்கு மிகையை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் ஆண்டின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 08 வருமான விடயங்களில் 5 சதவீதத்தில் இருந்து 205 சதவீதம் வரையிலும் 08 செலவின விடயங்களில் 06 சதவீதம் முதல் 252 வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. | எதிர்காலத்தில் பாதீடு தயாரிக்கம் மிகவும் அவதானத்துடன் வருமானங்கள் மற்றம் செலவினங்கள் எதிர்வு கூறப்பட்டு மிகவும் நியாயமான பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்கு கவனம் செலுத்துவதாக | வருடாந்த மதிப்பீடு நடைமுறைச்சாத்தி யமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்தஇலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

## 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகார பிரதேசத்தில் சேர்கின்ற களைவுகள் கரமெட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வனப் பாதுகாப்பு திணைக்களத்துக்குரிய காணி ஒன்றில் வெளியேற்றப்படுவதுடன் அக்காணியின் உரித்து கையேற்படாதிருந்ததுடன் கழிவுகளை வெளியேற்றுவதற்காக சுற்றாடல் அனுமதி பத்திரமொன்றும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | குறித்த காணி வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரியதாக இருந்ததுடன் வருடாந்த அனுமதி பத்திரத்தை கொண்டுள்ளதாகவும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளதாக | கழிவுகளை வெளியேற்றுதல்ள முறைப்படுத்தப்பட வேண்டும் |